'குயில் ஓசை கேட்பது இல்லை. கிளி கொஞ்சல் சாத்தியம் இல்லை. வியர்வை விரட்டும் காற்றும் இல்லை. மழையை அழைக்க மரமே இல்லை. மயானமாகி வருகிறதே நம் மண்!' உயிர் நரம்புகளை அறுப்பதுபோல இந்தக் குறுஞ்செய்தி தற்போது கோவை மக்களிடையே பரவி பெரும் அதிர்வைக் கிளப்பிவருகிறது!

விரிவாக்கம் செய்யப்பட்ட கோவையில் போக்கு வரத்து வசதிக்காக, சாலைகளை அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. நல்ல விஷயம்தான். ஆனால் அதற்காக, சாலை ஓரங்களில் நிற்கும் மரங்களை வெட்டி வீழ்த்துவது தான் வேதனையே. இருபுறமும் ஓங்கி உயர்ந்து நிற்கும் மரங்களுடன் பசுமைப் பாதையாக இருந்த லாலி ரோடு சிக்னல் தொடங்கி மருதமலை நோக்கிய சாலையில் சமீபத்தில் மரங்கள் வீழ்த்தப்பட்ட போது, பொங்கி எழுந்தார்கள் பசுமைக் காவலர் கள்.

'மரம் வெட்டுவதற்கான அரசு உத்தரவைக் காண் பியுங்கள். எந்தெந்த மரங்களை மட்டும் வெட்ட வேண்டும் என்று அடையாளம் போட்டுக் கொடுத் துள்ளதா நெடுஞ்சாலை?' என்று இந்தப் பிரச்னைக்கு எதிராகக் குரல்கொடுத்தார்கள். சூழலியலாளர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பிரச்னை, வெகுஜன மக்களிடையேயும் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, நீதிமன்றம் வரை போய் நின்றது. கோவையில்



2008-ம் ஆண்டில்...



# மரங்கள் அற்ற நரகம் ஆகிறது கோவை!

இன்று...